ஸ்ரீ:



ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

**ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:**

**ஸ்ரீமதே சடகோப ராமாநுஜ தாதயார்ய மஹாதேசிகாய நம:**

# பழியாத நல்வினையில் படிந்தார்

(ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி பறவாக்கோட்டை ஸ்ரீமத் ஆண்டவனின் குண அநுபவம் - ஸ்ரீமத் அஹோபில மடம் ஸ்ரீமத் அழகியசிங்கர் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ நாராயண யதீந்த்ர மஹாதேசிகன், வைகுண்டவாஸீ.)

---

**கழியாத கரு வினையில் படிந்த நம்மைக்**
**காலம் இது என்று ஒரு கால் காவல் செய்து**
**பழியாத நல்வினையில் படிந்தார் தாளில்**
**பணிவித்துப் பாசங்கள் அடைய நீக்கிச்**
**சுழியாத செவ்வழியில் துணைவரோடே**
**தொலையாத பேரின்பம் தர மேல் ஏற்றி**
**அழியாத அருள் ஆழிப் பெருமான் செய்யும்**
**அந்தம் இலா உதவி எலாம் அளப்பார் ஆரே?**

- உபகார ஸங்க்ரஹம், கடைசிப் பாசுரம்.

நாம் இந்த ஸம்ஸார மண்டலத்தில் எவ்வளவு ப்ராயச்சித்தங்கள் செய்தாலும் நீங்காத கொடிய பாபங்களை நிறைய செய்து உள்ளோம். இப்படிப்பட்ட நம்மைக் காப்பதற்கு ஏற்ற காலம் எது என எம்பெருமான் சிந்தித்த வண்ணம் உளன். நாம் எப்போதோ செய்த சில ஸுக்ருதங்கள் - நற்செயல்கள் பலித்திடும் காலம் வந்தவுடன்

பாபங்கள் செய்துள்ள நம்மை எம்பெருமான் ரக்ஷிக்க முற்படுகிறான். அப்போது அவனே நம்மை நேரில் ஸாக்ஷாத் ஆக ரக்ஷிப்பது இல்லை. ஆசார்யர்கள் திருவடிகளில் நம்மைப் பணியும்படிப் பண்ணி நேரியது ஆன அர்ச்சிராதி மார்க்கத்தில் ஆதிவாஹிகர்கள் ஆகிய துணையோடே பரமபதம் ஏற்றுவிக்கிறான். இப்படிப் பாபங்களையே செய்து வந்த நம் விஷயத்தில் அவிச்சிந்நம் ஆன ஆசார்ய பரம்பரையைத் தருதல் முதலாக எம்பெருமான் செய்து அருளும் எல்லைஇலாத உபகாரங்கள் அனைத்தையும் அளவு இட வல்லவர் யார் உளர்? ஜீவாத்மாக்கள் விஷயத்தில் எம்பெருமான் செய்து அருளும் எல்லை இலாத உபகாரங்களை அளந்து கூற வல்லவர் ஒருவரும் இலர் என்றபடி. ஆஸ்திகராய் இருப்பவர் ஒவ்வொரு நிமிஷமும் அநுஸந்திக்க வேண்டிய உத்தமம் ஆன பாசுரம் இது.

இந்த வகையில் இன்று நம் ஸ்ரீராமாநுஜ ஸம்ப்ரதாயத்தில் பல ஆசார்ய பரம்பரைகள் சிஷ்யர்களின் நன்மைக்காகப் பாடுபட்டு வருகின்றன. இவ்வாறு உண்டான ஆசார்ய பரம்பரைகளில் இன்று ஸ்ரீபௌண்டரீகபுரம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமமும் ஒன்று ஆகும். மிக்க ப்ரஸித்தி உடைய ஸ்வாமிகள் இங்கு ஆசார்யர்கள் ஆக எழுந்தருளி இருந்தார்கள்.

அட்வொகேட் ஆக இருந்து மிகப்பெரிய பண்டிதர் ஆக ப்ரஸித்தி பெற்று இருந்த ஸ்ரீ உ.வே. அன்பில் அ.வெ. கோபாலாசார்ய ஸ்வாமி இந்த ஆச்ரமத்தில் எழுந்தருளி இருந்த ஸ்ரீமத் பௌண்டரீகபுரம் ஸ்வாமி சிஷ்யர் ஆக ஸ்ரீமத் ஸ்வாமி ஸந்நிதியிலேய காலக்ஷேபம் பண்ணி நம் ஸம்ப்ரதாயத்துக்கு ஸ்தாபகர் ஆக விளங்கினார். வருஷம் தோறும் வித்வத் ஸபையை நடத்தி வந்தார். ஸ்ரீ உ.வே. மஹாவித்வான் அ.வெ. கோபாலாசார்ய ஸ்வாமி. இந்த ஸதஸ் பன்னெடுங்காலம் ஆக வருஷம் தோறும் நடைபெற்று வருகிறது இந்த ஆச்ரமத்தில்.

தற்காலம் ஆசார்யர் ஆக எழுந்தருளி இருந்துகொண்டு சிஷ்ய வர்கங்களை உஜ்ஜீவித்து வருகிறார் ஸ்ரீமத் ஆண்டவன் பறவாக்கோட்டை ஸ்வாமி.

ஆச்ரமங்களுக்கள் சிறந்தது க்ருஹஸ்தாச்ரமம். ஏதாவது தவறுகள் நேர்ந்தாலும் மிகுந்த பாபத்தைத் தராதது க்ருஹஸ்த ஆச்ரமமே. இதற்கு நேர் எதிர்மாறு ஆனது ஸந்ந்யாஸ ஆச்ரமம். சிறிய அபராதங்களையும் பொறாத ஆச்ரமம் ஆகும் இது. இப்படிப்பட்ட ஸந்ந்யாஸ ஆச்ரமத்தை ஏற்றுக்கொண்டு மஹான்கள் கொண்டாடும் வகையில் நிர்வஹித்து வருகிறார் ஸ்ரீமத் பறவாக்கோட்டை ஆண்டவன்.

ஸ்ரீமத் அஹோபில மடத்தின் திவ்ய ஆஸ்தானத்தில் ஸந்ந்யாஸம் மேற்கொள்வது மிகவும் கடினம் ஆனது ஆகும். ஸந்ந்யாஸ ஆச்ரம தர்மமே மிகுந்த ச்ரமம் தரக்கூடியது ஆகும். இதற்கு மேல் அகண்டம் ஆன ஐச்வர்ய நிர்வாஹம், மேலும் ச்ரமங்களைத் தரக்கூடியது ஆகும். இது தவிர காலம் தவறாமல் ஸ்ரீ மாலோலனின் திருவாராதன கைங்கர்யம் இந்த ஆஸ்தாந அதிபதிகளுக்கு உண்டு. இதுவும் மிகுந்த ச்ரமம் தரக்கூடியது ஆகும். இப்படிப் பலவகைப்பட்ட ச்ரமங்களை அனுபவித்து வரும் நம் மீது மிகுந்த க்ருபையுடன் ஒரு மஹான் எழுந்தருளி இருக்கிறார் என்றால், அந்த மஹான் - ஸ்ரீமத் பறவாக்கோட்டை ஆண்டவனே ஆகும்.

பூர்வாச்ரமத்திலேயே இந்த ஸ்ரீமத் ஆண்டவனின் பரிச்சயம் நமக்கும் பூர்வாச்ரமத்திலேயே உண்டு. சாஸ்த்ரஜ்ஞர்; ம்ருதுபாஷீ; ஸதாசாரபரர்; சிறந்த ஆத்ம குணங்கள் பெற்றவர். இப்படிச் சிறந்தவர் ஆன இந்த ஸ்வாமி இந்த ஆச்ரமத்தில் ஸந்ந்யாஸம் ஏற்று இதைத் திறம்பட நடத்தி வருவது நாடு அறிந்த விஷயம் ஆகும்.

ஸ்வதர்மங்களை அனுஷ்டிக்கவும் நிறைய பணம் வேண்டி உளது. வெளியில் ஸஞ்சாரம் மேற்கொள்வது இல்லை. ஸஞ்சாரம் செய்வதானால் நடந்தே தான் எழுந்தருள வேண்டும். இந்த நியமத்தை இன்று அளவும் மீறாமல் இருந்து வரும் மஹான் இவர் ஒருவரே ஆவார்.

ஸ்ரீமத் அஹோபில மடாதிபதிகளுக்கு ஸ்வாமி நம்மாழ்வார் நியமனத்தால் பல்லக்கில் ஸஞ்சாரம் பண்ணுவது ஸம்ப்ரதாய ஸித்தம். இப்பவும் நாமும் பல்லக்கில் தான் ஸஞ்சாரம் செய்கிறோம். முன்பு ஆட்கள் பல்லக்கைத் தூக்கி வந்தார்கள். தற்போது ஆட்கள் கிடைப்பது இல்லை. முன்பு நிறைய அக்ரஹாரங்கள் ஸமீபத்தில் இருந்தன. தங்கிச்செல்ல வசதியாய் இருந்தது. தற்போது நிலைமையே மாறிவிட்டது. ஆகையால் இருநூறு மைல்கள் தாண்டிப் போக வேண்டி இருப்பதால் பல்லக்கை வண்டியில் வைத்து அதில் அமர்ந்து செல்கிறோம்.

ப்ரக்ருதம் ஸ்ரீ பறவாக்கோட்டை ஸ்ரீமத் ஆண்டவன் தம் ஆச்ரமத்தை மிக நன்றாகப் பரிபாலனம் பண்ணி வருகிறார். தன் அனுஷ்டானத்தாலும் ஆத்ம குணத்தாலும் பலரை வசீகரித்து வருகிறார். காலையில் அபிகமனம் ஆனதும் காலக்ஷேபமும் ஸாதித்து வருகிறபடி. பக்தர்கள் பலர் மிகுந்த அன்போடு ஆச்ரம நிர்வாஹத்துக்காக ஆயிரக்கணக்கில் பணம் அனுப்பிய வண்ணம் உளர். அவை அனைத்தையும் திரட்டி வங்கியில் போட்டு மூலதனம் ஆக வைத்துள்ளார். எந்த ஒரு கார்யத்தையும் திட்டம் இட்டு ஆலோசித்தே பண்ணி வருகிறார் இந்த ஸ்வாமி. நம்

ஸ்ரீமடத்தில் இதற்கு முன் எழுந்தருளி இருந்த முக்கூர் ஸ்ரீமத் அழகியசிங்கரின் அதிகமான க்ருபைக்குப் பாத்ரர். இது இக்காலத்தில் உள்ள அனைவரும் அறிந்த விஷயமே ஆகும். இதை நன்கு தம் மனதில் கொண்டு அதற்கு ஏற்ப ஸ்ரீமத் முக்கூர் அழகியசிங்கர் ஸந்நிதியில் நடந்துகொண்டு வந்தார் இந்த ஸ்ரீமத் ஆண்டவன்.

பத்து வருஷங்களுக்கு முன் நாம் ஆச்ரம ஸ்வீகாரம் பண்ணிக்கொண்ட போதும் மிகுந்த க்ருபையோடு எழுந்தருளி இருந்து அனுக்ரஹித்துள்ளார். பிறகு பட்டாபிஷேக ஸமயத்திலும் கூடவே எழுந்தருளி இருந்து சுபம் ஆன தம் திருவுள்ளத்தால் அனுக்ரஹித்து, மந்த்ரங்களால் சுத்தம் ஆன தீர்த்தத்தால் தம் திருக்கையாலே ப்ரோக்ஷித்து அனுக்ரஹித்தாயிற்று. அந்த அநுக்ரஹம் இன்று அமோகம் ஆன சிறப்பைத் தந்து வருகிறது. ஸஞ்சாரம் செய்யாமலே ஒரே இடத்தில் இருந்துகொண்டே ஆச்ரம தர்மங்களை நன்றாக நடத்தி வருகிறார் இந்த ஸ்வாமி.

“பரஸ்பர ஹிதைஷிணாம் பரிஸரேஷுமாம் வர்த்தய” - “ஒருவருக்கு ஒருவர் ஹிதத்தையே விரும்பும் நல்லோர் ஸமீபத்தில் என்னை இருக்கப் பண்ண வேணும்” என்று ஸ்வாமி ஸ்ரீதேசிகன் ப்ரார்த்தித்தபடி, நமக்கு இந்த ஸ்வாமியுடன் அடிக்கடி ஸஹவாஸம் நேர்ந்து வருகிறது. ஆச்ரமத்து வெளியீடு ஆக நம் ஸம்ப்ரதாய க்ரந்தங்களைச் சிறந்த முறையில் அவ்வப்போது வெளியிட்டு வருகிறார் இந்த ஸ்வாமி. செய்யும் கார்யங்களை நன்கு ஆலோசித்துச் செய்துவருகிறபடியால் யாவும் நன்கு அமைகின்றன. நம் ஸம்ப்ரதாயத்தின் அபிவ்ருத்திக்காக இந்த ஸ்வாமி சிறப்பாகப் பாடுபட்டு வருகிறார். ஸதஸ் காலங்களில் நம் ஸம்ப்ரதாயத்தைச் சார்ந்த வித்வான்களுக்குச் சிறந்த முறையில் ஸம்பாவனை செய்து அவர்களை கௌரவித்து ஆகிறது.

இவ்வாறாக, பழியாத நல்வினைகள் பலவற்றைச் செய்துகொண்டு பார் முழுவதும் புகழ நிற்கும் ஸ்ரீமத் பறவாக்கோட்டை ஸ்ரீமத் ஆண்டவன் அரோக த்ருடகாத்ரர் ஆக மேலும் பல ஆண்டுகள் எழுந்தருளி இருந்து நம் ஸம்ப்ரதாயத்தைச் சிறந்த முறையில் பாதுகாத்து வரும்படி அருள்புரிய வேண்டும் என, அனைத்து உலகும் வாழ வந்த நம் ஆதிப்பிரான் மாலோலனிடம் ப்ரார்த்திக்கிறோம்.

*நாராயண நாராயண*

****************



பழியாத நல்வினையில் படிந்தார்



வில்லிவலம் ஸ்ரீமத் அழகியசிங்கர்

**நன்றி:**

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி. பறவாக்கோட்டை ஸ்ரீமத் ஆண்டவன். ஸ்ரீ கோபாலதேசிக மஹாதேசிகன் சதாபிஷேக ரத்ன மாலா - ஸ்ரீமத் ஆண்டவன் பௌண்டரீகபுரம் ஸ்வாமி ஆச்ரம வெளியீடு.

**ஸமர்ப்பணம்:**

வைகுண்டவாஸீ. ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி. பறவாக்கோட்டை ஸ்ரீமத் ஆண்டவன். ஸ்ரீ கோபால தேசிக மஹாதேசிகன் ஸந்நிதியில்.

**அனுமதி அருளியமைக்காக அநந்தகோடி க்ருதஜ்ஞதாரூப ப்ரணாமங்களுக்கு உரியவர்:**

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி. ராயபுரம் ஸ்ரீமதாண்டவன். ஸ்ரீ ரகுவீர மஹாதேசிகன்

அன்னையாய் அத்தனாய் என்னை ஆண்டிடும் தன்மையான்
சடகோப இராமாநுசன் என் நம்பியே

சந்தமிகு தமிழ்மறையினுடையவும் சந்தமிகு தமிழ்மறையோனுடையவும்
பரமானுக்ரஹத்தால் ஜீவிக்கும்

தாஸன்
திருவெவ்வுள். ராகவந்ருஸிம்ஹன், பெருமாள் கோவில்.